This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# வஸந்த காலக் குற்றங்கள்

இந்திய ரெயில்வேயின் சரித்திரத்தில் அன்று ஒரு பொன்னாள். திருப்பாப்புலியூர் பாஸஞ்சர் சரியான நேரத்தில் பங்களூர் ஸிட்டி ரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்தது. சரியான தினத்தில் வந்து சேர்ந்தால் கூட ரெயில்வே நிர்வாகத்தினர் மகிழ்ச்சியுறும் அந்த ரெயிலை பிளாட்பாரம் 2லேயே மறந்துவிடலாம். அதில் வந்து இறங்கின ஆறுமுகம்தான் முக்கியம்.

அது அவன் சொந்தப் பெயரா தெரியாது. மணி, காதர், பீட்டபால், ஏசுவடியான் போன்ற பற்பல பெயர்கள் அவனுக்கு உண்டு. உயரம் ஐந்தடி ஆறு அங்குலம், வாட்ட சாட்டமான உடற்கட்டு... நல்ல நிறம், சுருட்டையான தலைமயிர், கரிய பெரிய விழிகள் இடது கைப்பழக்கமும் சற்றே கிட்டப்பார்வையும் உடையவன். எதற்கு முழுவதும் வர்ணிக்க வேண்டும்? பெங்களூர் உப்பாரப்பேட்டை போலீஸ் நிலையத்தில் அவனுடைய குற்றப்பதிவு அட்டை இருக்கிறது. அதைப் பார்த்தால் போதும்.... சற்று பழுப்பாகிப் போன அவன் போட்டோவைப் பாருங்கள். அந்தச் சிரிப்பில் குற்றம் தெரிகிறதா? இல்லை இரண்டு வருஷங்களுக்கு முன் போலீஸ் புகைப்படக்காரர் எடுத்தது.

(என்னய்யா சிரிக்கிறே?) அவன் இன்றைய தோற்றத்திற்கும் புகைப்படத்திற்கும் ஒற்றுமை அதிகமில்லை. மீசை திருத்தி, தாடியை எடுத்து விட்டான். கண்ணாடி அணிவதில்லை, நடையுடை பாவனைகளில் மெலிதான மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறான். இன்ஸ்பெக்டர் நவநீத்குமார் உட்பட அவனை இப்போது அடையாளம் கண்டு கொள்வது சற்று சிரமம்.

ரெயில் நிலையத்திலிருந்து வெளிப்பட்ட ஆறுமுகத்தை நீங்கள் ஒரு நம்பகமான கம்பெனியின் ஸேல்ஸ்மேன் என்றோ ஒரு இன்ஜீனியர் என்றோ கேள்வி கேட்காமல் ஒப்புக் கொள்வீர்கள். கையில் அரிஸ்ட்டோக்ராட் ரகப்பெட்டி, கண்களில் மெல்லிய கண்ணாடி, புதிய நலுங்காத சட்டை, பாண்ட். ஒரு சிகரெட்டை உதட்டில் பொருத்திப் பற்ற வைத்துக் கொண்டு வெளிப்பட்டவனை கழுத்தில் மப்ளர் அணிந்த ஒரு அதிகாலை ஏஜண்ட் "க்யா ஸாப்! லாட்ஜிங் ஹோனே ஸாப்! அமர் ப்ராடவே அச்சா ரூம் ஸாப்!" என்று வரவேற்க ஆறுமுகம் உள்ளுக்குள் சந்தோஷப்பட்டான், பங்களூர் அவனை வரவேற்கிறது, இரண்டு வருஷமாகிறது. சென்றமுறை சிறைவாசம் முடிந்து வெளிப்பட்டதும் ஒரே ஒரு நாள் இருந்துவிட்டுத் தன் சொந்த ஊருக்குச் சென்றுவிட்டான். (அகரம்பட்டு) இரண்டு வருஷம் நல்லவனாக இருந்து பார்த்தான். மறுபடி அவனுக்கு நகரதாகம் ஏற்பட்டுவிட்டது. பங்களூரின் பொன்முலாம் பூசின கவர்ச்சிகளும், குற்றங்களும், பானங்களும், பாவங்களும், சந்தர்ப்பங்களும், சந்துகளும் அவனைத் "திரும்பி வா பாவப்பட்டவனே" என்று அழைத்தன. வந்துவிட்டான்.

மறுபடி அவன் க்ரைம் ரிக்கார்டைப் பாருங்கள். ஆறுமுகம் என்கிற பெயருக்கும் அவன் தோற்றத்திற்கும் சம்பந்தம் காண முடிகிறதா? ம்ஹூம் அவனை எந்தப் பெயரிலும் சுலபமாக மறைத்துக் கொள்ளக்கூடிய பொதுப்படையான தோற்றமல்லவா! அதுதான் அவன் சொத்து. மற்றொரு சொத்து அவன் திறமை. எதில்?